# MISSIONARY DAY PRAYER SERVICE

## April - 2017

## THEME: TO SPREAD THE GOSPEL WITH JOYFUL LIPS

**Procedure:**

- Introduction
- Hymn
- Gospel Reading (LK 9:23-26)
- Reflection
- Missionary for imitation
- Intercessions
- Prayer for Missionaries and for Missionary Vocations
- Concluding Prayer
- Final Hymn

**Introduction**

***"Easter is not a Season but a way of life."***

We warmly welcome all of you to this missionary Day Prayer Service. We have journeyed with Jesus for the past 40 days, reflecting on his suffering, passion and death. Now we are celebrating his glorious resurrection. This great solemnity of Easter reminds of two things: Necessity of Cross and the Urgency of Proclaiming the gospel. Jesus after his resurrection entrusted the task of proclamation to those who follow him and ascended to the Father. And so, as we celebrate the missionary day today, it is very fitting that we reflect on the theme: '*To Spread the Gospel with Joyful lips.'* As Christians following the resurrected Lord we are expected to radiate the joy and hope of Easter and thus carry forward the good news of salvation to the ends of the earth. Hence, during this prayer service let us pray for the grace that we may find true joy and happiness in our work of evangelization.

**Hymn: To follow the Lord and find freedom (Pray Sing: 410)**

**Gospel Reading: Luke 9: 23-26.**

**Reflection**

***"Jesus through his death and resurrection<br>closed the dark door of death and opened the shining door of eternal life."***

We all know how the butterfly comes into existence. In the beginning before becoming a butterfly it is only an ugly and unpleasant caterpillar. It goes through a hard process of becoming a Chrysalis and still after much pain and struggle it becomes a delightful and wonderful butterfly. This can be very well compared to Jesus who underwent enormous agony and pain before his crucifixion on the cross. Yet, after three days he rose again gloriously as saviour of mankind. The life of human being is not always bed of roses but it is accompanied by some kind of pain or other. At no point of time one can say, I am free from all worries and problems. As Christians with the missionary mandate it is to such people, tormented by struggles of life, we are called to take the Gospel with joyful lips. Our way of life must let them know there is a resurrected Christ who gives joy and hope to those who believe in him. Secondly, Easter invites us to live like Resurrected Jesus. This implies that we need to die first. The call of Jesus to deny oneself means that we need to die to ourselves, our selfishness and to our bad habits. Only then we can rise up with Jesus gloriously and can be signs of Easter Joy. Are we ready to go through the painful process of dying to ourselves? Are we prepared to rise with Jesus to bring Joy to the perplexed? Let us pause for a while reflecting on these questions.

## MISSIONARY FOR IMITATION

**Fr. Vladimir Ondrasek**

### EARLY LIFE

Vladimir Ondrasek was born in Czechoslovakia on 10 December, 1918 and baptized in the parish church on 6 January, 1919. When he was 12 years old, he became a boarder at the Salesian School Frystak. The Salesian way of life attracted him and young Vladimir decided to become a Salesian to devote his life to help other youngsters. He entered the novitiate in 1935 and professed the following August. He was ordained a priest at Prague, on 29 June 1946.

### MINISTRY

For two years after his ordination Fr.Vladimir was Catechist in the Studentate of Philosophy at Orechou. Only after that he could realize his desire of becoming a missionary. He came to India in 1948. There he worked for the next 24 years of his life: 1948-50 as Prefect at Tirupattur, 1950-51 as Catechist in the incipient theologate at Yercaud, 1952-54 as a teacher in St. Joseph's Madras, 1953-60 as teacher and Prefect in Bombay, 1960-64 again at Tirupattur as Dean of Studies and Principal of the College, 1965-68 as Provincial Secretary in Calcutta, 1969 as Confessor in Calcutta and then until 1972 once again at Tirupattur.

Fr. Di Fiore who was his provincial wrote, "He embraced the missionary ideal with full enthusiasm, made India his country of adoption and espoused the cause of her vast multitudes with all their problems of poverty, sickness, illiteracy etc… With his keen intelligence, it did not take him long to realize that his field of apostolate lay in education…He also realized that, if he had to teach in Public Schools and Colleges he needed University Degrees. His intelligence, strong will and firm determination enabled him, in just a few years time, to go through his intermediate and B.A. and finally secure a double M.A in English Literature and Mathematics."

In 1972, Fr Vladimir obtained permission from the Rector Major and went to Australia to spend his remaining years of his priestly life, working for his fellow countrymen who had migrated to that country. The first few months were days of loneliness and homesickness for him. But his strong will helped him to overcome this and other difficulties. Travelling long distances, he tried to reach out to as many of his flock as possible, to be able to bring them the consolations of our holy religion. Fr. Ondrasek did not think of his own sickness, and when he was persuaded to see a doctor, it was too late. In mid-July he suffered a stroke and passed away at 10.00am. on 16 July 1969, to that eternal reward for which he had longed so ardently.

### CHARACTERISTICS:

**1. Availability for Priestly ministry:** After a busy week of teaching, he would ask the superior what his Sunday assignment was. Availability and readiness to serve were among his chief characteristics. It was in this spirit that he offered his services for the spiritual assistance of his countrymen in Australia.

**2. He wanted to be another Christ:** He often reminded himself that he had to be another Christ, that he had to lead the people by example and that he had to practice patience. Once, after watching a film he wrote, "I would like to be like that priest I have just seen portrayed". A few days before he died, that is on 2 July 1977, he made his last entry in his diary: "I must be polite and understanding, I must not hurt people".

**3. Hard-worker:** What shortened his life was not his many bodily ailments, but the pace at which he worked, the constant draining of strength and energy on behalf of the people of God. Here was a soldier who fought a good battle, a runner who ran a victorious race. Here was a martyr of duty and service.



# Fr. Vladimir Ondrasek

| | | |
|---|---|---|
| Birthday: | 30-12-1918 | Czechoslovakia |
| First Profession: | August 1936 | |
| Ordination: | 29-06-1946 | Czechoslovakia |
| Died: | 16-07- 1977 | Svdnev |

**Intercessions**

**Response: Lord Jesus, help us to work for the spread of the good news.**

1. That all Christians may personally experience the touch of Jesus in their lives and so strive to constantly grow in faith. **Resp.**

2. That messengers of Good News facing opposition and undergo persecution may receive courage, fortitude and strength of conviction in those trying moments. **Resp.**

3. That all Christians may realize the missionary responsibility entrusted to them and share in this task in whatever life situation they are placed. **Resp.**

4. That all of us may be able to share in the mission of Jesus by serving the poor, the hungry, the sick, the suffering and the helpless. **Resp.**

*Let us pause for a moment to pray for local and Personal needs...*

**Our Father …**

**PRAYER FOR MISSIONARIES AND FOR MISSIONARY VOCATIONS**

God our Father, you desire that all men and women come to the knowledge of your truth and be saved. You sent Jesus, your son, as your messenger to bear witness to the truth. He preached the kingdom of God by his words, action, life and death. To continue that mission Jesus called the disciples, prepared them and sent them out so that the Gospel could be preached everywhere. Behold, the harvest is yet plentiful and the labourers are few. We beseech thee to send labourers into your harvest. Inspire many young men and women to become missionaries to take your word to the ends of the earth. Strengthen the missionaries in their toil and stress. Bless their work and bring it to fruitful completion. Through Christ our Lord. **AMEN.**

**Concluding Prayer:**

God our Father, the source of all that is good, you are present in everything and in everyone in the world. Direct us in the path of Salvation and help us in our missionary work that we may lead all people in your way and be sings of Joy and Hope which your son has brought by his glorious resurrection. This we ask through Christ our Lord. Amen.

**Final Hymn: Jesus is Risen (Pray sing: 279)**

# சலேசிய மறைபரப்பு நினைவு நாள் – ஜெப வழிபாடு

***11 ஏப்ரல் 2017***

**கருத்து : நற்செய்தியை மகிழ்ச்சியோடு அறிவிக்க**

**<u>வழிமுறை</u>**

- முன்னுரை
- பாடல்
- நற்செய்தி வாசகம்
- சிந்தனை
- மறைப்பணியில் ஓர் முன்னோடி
- மன்றாட்டுக்கள்
- மறைபரப்புப்பணியாளர்களுக்காகவும் மறைபரப்புப்பணி இறையழைத்தலுக்காகவும் மன்றாட்டு
- இறுதி ஜெபம்
- இறுதிப் பாடல்: நீங்கள் என் சாட்சிகள் (இறை அலைகள்)

**முன்னுரை:**

அன்பார்ந்த சகோதரர்களே, உங்கள் அனைவரையும் இந்த ஜெப வழிபாட்டிற்கு அன்போடு அழைக்கிறோம். கடந்த நாற்பது நாட்களாக இயேசுவின் துன்பங்கள், பாடுகள், மரணம் போன்றவற்றை தியானித்து நாம் அவரோடு பயணித்தோம். இப்போது அவருடைய மகிமையான உயிர்த்தெழுதலை கொண்டாடி வருகின்றோம். இப்பெருவிழா சிலுவையின் முக்கியத்துவத்தையும், நற்செய்தி அறிவிப்பின் கட்டாயத்தையும் நமக்கு நினைவுறுத்துகிறது. உயிர்ப்புக்குப்பின் இயேசு கிறிஸ்து தான் ஆற்றிவந்த நற்செய்திப் பணியை நம்மிடம் ஒப்படைத்துவிட்டு விண்ணகம் எழுந்து சென்றார். எனவே மறைப்பணி நாளாகிய இன்று, "நற்செய்தியை மகிழ்ச்சியோடு அறிவிக்க" என்னும் தலைப்பில் நாம் சிந்திப்பது சாலச்சிறந்தது. உயிர்த்த இயேசுவை பின்பற்றும் நாமனைவரும் ஈஸ்டர் பெருவிழா கொண்டுவரும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் பிறருக்கு தருபவர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். எனவே நம்முடைய நற்செய்திப்பணியில் நாம் உண்மையான மகிழ்ச்சியை காணவும், அந்த மகிழ்ச்சியை பிறரோடு பகிர்பவர்களாகவும் வாழவும் வரம் வேண்டி இவ்வழிபாட்டில் இணைவோம்.

**தொடக்கப் பாடல்: "ஆண்டவரில் அகமகிழ்ந்திடுங்கள்"**

**நற்செய்தி வாசகம்: லூக்கா 9:23–26**

**சிந்தனை**

***"தன் இறப்பினாலும், உயிர்ப்பினாலும் சாவின் கதவை மூடிய இறைமகன் இயேசு, முடிவில்லா வாழ்வின் கதவை நம் அனைவருக்கும் திறந்து வைத்துள்ளார்"***

ஒரு பட்டாம்பூச்சி உருவாகும் கதை நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. முதலில் பார்க்கவே சகிக்கக்கூடிய தோற்றமுள்ள கூட்டுப்புழுவாக அது உருவாகின்றது. வலி மிகுந்த ஒரு பரிணாம மாற்றத்திற்குப் பின்தான் அது பொலிவுமிக்க, கண்களுக்கு உவப்பூட்டும் ஒரு அழகிய பட்டாம்பூச்சியாக மாறுகின்றது. இதைப்போன்றே இறைமகன் இயேசுவும் சிலுவை மரணத்தினால் சொல்லொண்ணா துயரை அடைந்து, இறந்த மூன்றாம் நாள் மாட்சிமையோடு உயிர்த்தெழுந்தார். மனித வாழ்வு துன்ப துயரங்களோடு பிண்ணிப்பிணைந்த ஒன்று. கவலை, துன்பம் இல்லாத மனிதர் யாருமே இருக்க முடியாது. மறைப்பணி அழைப்பைப் பெற்றுள்ள நாம், வாழ்க்கையே போராட்டமாக இருக்கும் இப்படிப்பட்ட மக்களுக்குத் தான் மகிழ்ச்சியின் நற்செய்தியை அறிவிக்க கடமைப்பட்டுள்ளோம். நம்முடைய வாழ்க்கை முறை, உயிர்த்த இயேசு கொண்டுவரும் நம்பிக்கைக்கும், மகிழ்ச்சிக்கும் சான்றாக அமைய வேண்டும். ஈஸ்டர் பெருவிழா நம் அனைவரையும் உயிர்த்த கிறிஸ்துவின் மறுவுறுவாக வாழ அழைக்கின்றது. அவரைப் பின்பற்றுவோர் தன்னையே மறுத்து சிலுவையை சுமந்து வரவேண்டும் என்ற இயேசுவின் அழைப்பு நாம் நமக்குள்ளே இறக்க வேண்டும், நம்முடைய சுயநலத்திற்கும், தீய பழக்கங்களுக்கும் இறக்க வேண்டும் என்பதையே உணர்த்துகிறது. அவ்வாறு நாம் இறக்கும்போது தான் நம்பிக்கையின் அடையாளங்களாக வாழ முடியும்.

நுமக்குள்ளே இறக்கும் இந்த வலி மிகுந்த வழிமுறையை சந்திக்க நாம் தயாரா? இயேசுவோடு உயிர்த்து வாழ்வில் துவண்டவர்களுக்கு மகிழ்ச்சி கொண்டுவர நாம் தயாரா? சிந்திப்போம்.

## <u>மறைப்பணியில் ஓர் முன்னோடி</u>

**அருட்தந்தை. வளதீமீர் ஆண்டராசெக் ச.ச**

**இளமைப் பருவம்:**

அருட்தந்தை. வளதாமீர் ஆண்டராசெக் சிகோஸ்லோவாக்கியாவில் 1918–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10–ம் தேதி பிறந்தார். 1919–ம் ஆண்டு ஜனவரி 6–ம் தேதி திருமுழுக்கு பெற்றார். தன்னுடைய 12 வயதில் ஃப்ரைஸ்டாக் என்னுமிடத்திலுள்ள சலேசிய பள்ளியில் தங்கி படித்தார். சலேசிய வாழ்க்கை முறையால் ஈர்க்கப்பட்டு, தானும் ஒரு சலேசியனாகி மற்ற இளையோருக்கு உதவி தீர்மானம் எடுத்தார். 1935–ல் நவசந்நியாச மடத்தில் சேர்ந்த அவர் அடுத்து வந்த ஆகஸட் மாதம் தன்னுடைய முதல் வார்த்தைப் பாட்டினை எடுத்தார். பின்பு தன்னுடைய இறையியல் படிப்பிற்குப் பின் 1946–ம் ஆண்டு ஜீன் மாதம் 29–ம் தேதி ப்ராகுவே என்னுமிடத்தில் குருவாக திருநிலைப்படுத்தப் பட்டார்.

**பணி வாழ்வு:**

குருப்பட்டம் பெற்ற பின்பு இரண்டு ஆண்டுகள் தன்னுடைய இடத்திலே பணியாற்றினார். பிறகு தான் மறைப்பணி ஆர்வத்தை தன்னிலே உணர்ந்து 1948–ம் ஆண்டு இந்தியா வந்தார். அடுத்த 24 ஆண்டுகள் திருப்த்தூர், ஏற்காடு, சென்னை புனித வளனார், பாம்பே, கல்கத்தா போன்ற இடங்களில் பல நிலைகளில் பணியாற்றினார். அவருடைய மாநிலத்தலைவராக இருந்த தந்தை டி பியோரே இவ்வாராக எழுதினார்: அவர் மறைப்பணியை முழு ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டு, இந்திய நாட்டை தன் நாடாக கருதி, இந்திய மக்களின் ஏழ்மை, வியாதிகள், அறியாமை போன்றவற்றை அகற்ற உழைத்தார். தன்னுடை அறிவுக்கூர்மையினால் தான் பணியாற்ற உகந்த இடம் கல்வித்துறை என்பதை உணர்ந்தார். அதற்கான தகுதிகளைப் பெற விரும்பி மிகுந்த உறுதியோடும், ஆர்வத்தோடும் சிலவருடங்களிலேயே இளங்களை பட்டமும். ஆங்கிலத்திலும், கணிதத்திலும் இரு முதுகலைப் பட்டங்களையும் பெற்றார்.

1972–ம் ஆண்டு சபைத் தலைவரின் அனுமதி பெற்று தன்னுடை நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து அமெரிக்காவில் வாழ்ந்து வரும் மக்களுக்காகப் பணியாற்ற அங்கு சென்றார். அங்கு சென்ற சில மாதங்கள் தனிமையாய் இருப்பதாய் உணர்ந்தார். இருப்பினும் அவருடைய மன வலிமையினால் இந்த பிரச்சனையையும் மற்ற அனைத்துப் பிரச்சனைகளையம் கடந்து வந்தார். பல தூரம் பயணம் செய்து நம் சமயம் தரும் ஆறுதலையும் தேற்றுதலையும் தன்னுடைய மக்களோடு பகிர்ந்து வாழ்வதில் மனநிறைவைக் கண்டார். தன்னுடைய உடல் நோயையும் பொறுட்படுத்தாமல் பணியாற்றி வந்தார். மருத்துவரை பார்க்க அவரைக் கட்டாயப்படுத்தி அழைத்து சென்றபோது உடல் நோய் குணப்படுத்தும் நிலையைத் தாண்டிவிட்டது. 1969ம் ஆண்டு ஜுலை 16–ம் தேதி காலை 10.00மணியளவில் மாரடைப்பால் இறந்தார்.

**தந்தையின் பண்புகள்:**

**1. ஆன்ம காரியங்களுக்காக எப்போதும் தயாராக இருத்தல்**

வாரம் முழுவதும் பாடம் கற்பித்து வந்தாலும், ஞாயிற்றுக்கிழமைகளில் தன்னுடை பணி என்னவென்று பெரியோரைக் கேட்பார். அவரிடமிருந்த பல நற்பண்புகளில், எப்போதும் தயாராக இருந்து பிறருக்கு பணிவிடை புரியும் பண்பே முதன்மையாக விளங்கியது. ஆஸ்தேரிலியாவில் வாழ்ந்து வந்த தன் மக்களுக்கு ஆன்மீகப் பணியாற்றும் ஆர்வம் தன்னுடைய முழு ஆர்வத்தின் வெளிப்பாடே ஆகும்.

**2. மறு கிறிஸ்துவாக வாழ விரும்பினார்:**

தான் ஒரு மறு கிறிஸ்துவாக வாழ வேண்டுமென்றும், நல்ல முன்மாதிரியால் அடுத்தவரை வழிநடத்த வேண்டுமென்றும், பொறுமையைக் கடைபிடிக்க வேண்டுமென்றும் அடிக்கடி தன்னையே நியாபகப்படுத்திக் கொள்வார். ஒருமுறை ஒரு சினிமாவைப் பார்த்த பின்பு இவ்வாறாக எழுதினார்: நானும் இத்திரையில் பார்த்த குருவானவரைப் போல வாழ வேண்டும். தான் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பாக ஜீலை 2–ம் தேதி 1977–ம் ஆண்டு கடைசியாக தன்னுடை குறிப்பேட்டில் இவ்வாறாக எழுதினார்: "நான் கனிவுள்ளவனாகவும், புரிந்துகொள்பவனாகவும், இருக்கவேண்டும். அடுத்தவரை ஒருபோதும் காயப்படுத்தக் கூடாது."

**3. கடின உழைப்பு:**

தன்னுடைய ஆயுட்காலம் குறைந்ததன் முக்கியக் காரணம் உடல் நலக் குறைகளல்ல, மாறாக ஓய்வின்றி அவர் உழைத்த விதம், தன்னுடை எல்லா சக்தியையும் கடவுளின் மக்களாக செலவிட்டதே ஆகும். தன்னுடைய ஓட்டத்தை வெற்றியுடன் ஓடி முடித்த, நல்ல போர் வீரராய் இருந்தார். கடமைக்காகவும், தொண்டாற்றுவதற்காகவுமே ஒரு மறைசாட்சியாய் வாழந்தார்.

*இப்பொழுது சில நிமிடங்கள் இவரின் பண்புகளைப் பற்றி தியானித்து ஏதாவது ஒரு பண்பினை நமதாக்கிட உறுதியெடுப்போம்.*

# அருட்தந்தை. வளதீமீர் ஆண்ட்ரசெக்



பிறந்த நாள்: 30-12-1918 சிகோஸ்லோவாக்கியா

முதல் வார்த்தைப்பாடு: ஆகஸ்ட் 1936

குருப்பட்டம்: 29-06-1946 சிகோஸ்லோவாக்கியா

இறப்பு: 16-07-1977 சிட்னி

**மன்றாட்டுக்கள்:**

**உங்கள் பதில்:** ஆண்டவரே! *உம்முடைய நற்செய்திப்பணிக்காய் உழைத்திட உதவியருளும்.*

1. கிறிஸ்துவர்கள் அனைவரும் இயேசுவின் அன்பை சுவைத்திடவும், தொடர்ந்து நம்பிக்கையில் வேரூன்றி வளரவும் துணை செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. சவால்களை சந்தித்து துன்பங்களை அனுபவித்துவரும் நற்செய்திப் பணியாளர்கள் அனைவரும் தைரியத்துடனும், திடத்துடனும், துயர நேரங்களில் நம்பிக்கையில் உறுதியுடன் நிலைத்து நிற்கவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள நற்செய்தி அறிவிக்கும் பணியை உணர்ந்து தாங்கள் வாழும் சூழ்நிலைகளில் தங்களால் முடிந்த பங்கினையாற்றி மறைப்பணியாற்றிட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இங்கு கூடியுள்ள நாமனைவரும் ஏழைகளுக்கும், நோயுற்றோருக்கும், பசியிலிருப்போருக்கும், துன்பப்படுவோர், துணையின்றி தவிப்போருக்கு பணியாற்றுவதன் வழியாய் இயேசுவின் இறையரசுப் பணியில் பங்கேற்ற வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நம்முடைய தனிப்பட்ட கருத்துக்களுக்காக மன்றாடுவோம்...

**<u>மறைபரப்பு பணியாளர்களுக்காகவும் மறைபரப்பு பணி இறையழைத்துக்காக மன்றாட்டு</u>**

தந்தையே இறைவா! அனைத்து மக்களும் உம்மை பற்றிய உண்மையை அறிந்து மீட்பு பெற வேண்டுமென்று திருவுளமானீர். உம் திருமகனாகிய இயேசுவை உண்மைக்கு சான்று பகர உலகிற்கு அனுப்பினீர். அவர் தம் சொல்லாலும் செயல்களாலும் அரும் அடையாளங்களாலும் நற்செய்தியை அறிவித்து மக்களை இறைவன்பால் ஈர்த்தார். தன் பணி தொடரசீடர்களை அழைத்து, அவர்களுக்கு கற்பித்து, நற்செய்தியை உலகெங்கும் அறிவிக்க அனுப்பினார். அந்தோ! அறுவடையோ இன்னும் மிகுதி,வேலையாட்களோ குறைவு! அறுவடைக்கு வேலையாட்களை அனுப்புவீராக. இளைஞர்களையும் இளம்பெண்களையும் உலகின் கடை எல்லை வரை நற்செய்தியை அறிவிப்பவர்களாக தூண்டி எழுப்பும். இன்பத்திலும் துன்பத்திலும் மறைபரப்பு பணியாளர்களை திடப்படுத்தும். மறைபரப்பு பணியாளர்களின் பணியை ஆசீர்வதித்து பன்மடங்கு பலன்தர செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**செபிப்போமாக:**

எல்லா நன்மைக்கும் ஊற்றான தந்தையே! நீர் எல்லாவற்றிலும், எல்லா மனிதரிலும் பிரசன்னமாயிருக்கிறீர் என்பதை உணர அருள்தாரும். உமது நம்பிக்கையின் பாதையில் எங்களை வழிநடத்தி எங்கள் மறைப்பணியில் துணைசெய்தருளும். உம் நற்செய்திப் பணியாற்றுவதன் வழியாய் மக்களை உம் வழிநடத்திடவும், கிறிஸ்துவின் உயிர்ப்பினால் வந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையும் பிறருக்கு வழங்கி நம்பிக்கையின் மக்களாக வாழ துணை செய்யவேண்டுமென்று வரமருளுள உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**இறுதிப்பாடல: நீங்கள் என் சாட்சிகள்...**